**செ. கு. எண்**:210 **நாள்**:05.06.2012

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 5.6.2012

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் வட்டம், மன்னவனூர் கிராமம், கும்பூர் அக்கரைக்காடு என்ற இடத்தில் **2.6.2012** அன்று விவசாய வேலை செய்து கொண்டிருந்த போது, திரு சேது என்பவரின் மகன் முருகன் இடி, மின்னல் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இத்துயரச் சம்பவத்தில் அகால மரணமடைந்த முருகன் அவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இவ்விபத்தில் காலமான முருகன் குடும்பத்திற்கு மாநில பேரிடர் தணிப்பு நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**